# சிறுபாணாற்றுப்படையின் சாயலில் பாடப்பட்ட கடவுள் வாழ்த்துப்பாடலா திருமுருகாற்றுப்படை?

*முனைவர் ஆ. சந்திரன்*
உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை ஆய்வுத்துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), வேலூர்

**மலர்: 4**

**இதழ்: 1**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2019**

ISSN: 2454-3993

நெறிப்படுத்துதல் அல்லது வழிபடுத்துதல் என்பதை நோக்கமாகக் கொண்டது ஆற்றுப்படை. வறுமையிலிருந்து மீண்டு வளம்பெற்ற இரவலன் வறுமையுடன் இருக்கும் மற்றோர் இரவலனைத் தான் வளம்பெற்று வாழக் காரணமான வள்ளல் அல்லது மன்னனிடம் சென்று பெருஞ்செல்வம் பெற்று வளமுடன் வாழுமாறு நெறிப்படுத்துவதாய் இது அமையும்.

**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறார்க்கு அறிவுறீஇச்**
**சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும் (தொ.பொ.91:3-6)**

எனத் தொல்காப்பியர் கூத்தர், பாணர், பொருநர், விறலி ஆகிய நால்வர் மட்டுமே ஆற்றுப்படுத்த உரியவா?கள் என்று கூறுகிறது. அப்படி இருக்க அடியவரை இறையருள் வேண்டி ஆண்டவனிடத்தே (முருகன்) ஆற்றுப்படுத்தும் திருமுருகாற்றுப்படை ஆற்றுப்படை என்ற பெயருடன் பத்துப் பாட்டுத் தொகுப்பில் எப்படி இடம்பெற்றது? சில கூறுகள் சிறுபாணாற்றுப்படையுடன் நெருக்கமாய் அமைந்திருப்பதால் அப்பாடலின் சாயலில் பாடப்பட்ட கடவுள் வாழ்த்துப் பாடலா என்பன போன்ற வினாக்களுக்கான விளக்கங்களைத் தேட முயல்கின்றது இக்கட்டுரை.

## திருமுருகாற்றுப்படையும் ஆற்றுப்படை இலக்கணமும்

திருமுருகாற்றுப்படையைத் தொல்காப்பியர் கூறியுள்ள ஆற்றுப்படை இலக்கணத்திற்கு ஏற்புடைய பாடலாகக் கொள்ள முடியுமா? என்ற வினா நெடுங்கலாமாகவே இருந்து வருகின்றது.

பத்துப்பாட்டிற்கு உரையெழுதிய நச்சினாக்கினியா? கூத்தரும் பாணரும் என்ற தொல்காப்பிய நூற்பாவில் இடம்பெற்றுள்ள "பக்கமென்றதனானே அச்செய்யுட்களைக் கூத்தராற்றுப்படை, பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை, முருகாற்றுப்படையென வழங்குதலும் ஆற்றினருமையும் அவனூர்ப் பண்பு முதலியனவுங் கொள்க"[1] எனப் பொருள் விரித்து முருகாற்றுப்படையும் அவ்விலக்கணத்திற்குப் பொருந்தும் என்று விளக்கம் அளித்துள்ளார். அத்துடன், "முருகாற்றுப்படை என்பதற்கு வீடு பெறுவதற்குச் சமைந்தானோர் இரவலனை, வீடு பெற்றான் ஒருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்துவதென்று பொருள் கூறுக"[2] எனவும் விளக்கம் அளித்துள்ளார். அவரைப் போன்றே "கவிப்பெருமாள் (பரிப்பெருமாள்), பெயர் புலப்படாத உரையாசிரியர், பரிமேலழகர், பரிதியார்"[3] ஆகியோரும் பொருள் கொண்டுள்ளனர். உரையாசிரியர்களின் மேற்கண்ட விளக்கங்கள் தொல்காப்பியத்தில் ஆற்றுப்படைக்குக் கூறப்படும் விளக்கங்கள் திருமுருகாற்றுப் படைக்கும் பொருந்தும் என்பதாகவே உள்ளன.

தற்காலத்தில் மாறுபட்ட விளக்கங்களை அறிஞர்கூறுகின்றனர். "திருமுருகாற்றுப்படை தொல்காப்பியம் கூறாத ஒன்றாகும்"[4] என்கிறார் மா. இராசமாணிக்கனார். "அன்பரை ஆண்டவனிடத்தே ஆற்றுப்படுத்துதல் தொல்காப்பிய இலக்கணத்திற்கு வேறானது"[5] என்கிறார் மு. கோவிந்தசாமி. "....சென்று பயனெதிர ஆற்றுப்படுத்தற்குரியா? கூத்தா? முதலிய நாற்பாலரேயன்றி வேறு யாருமிலா? என்று தொல்காப்பியா? வரையறுத்து ஓதாமையானும், பெற்ற பெருவளம் பெற்றார்க்கு அறிவுறுத்தலே அந்நூற்பாப் பகுதியிற் சிறப்புடைத்தாகலானும், பேரின்ப வீட்டினும் சிறந்த பெருவளம் பிறிதின்மையானும், புதிது புனையப்பட்ட இத்திருமுருகாற்றுப்படை முன்னை நூல் வழக்கொடு மேற்கூறியாங்கு சற்றே வேறுபாடுடையதாயினும் மற்று மாறுபாடுடைய தன்று"[6] புலவர் என்கிறார் இலக்குவனார். அவரது கருத்திற்கு உடன்படுவது போலவே க. வெள்ளைவாரணரும், "திருமுருகாற்றுப்படை, தொல்காப்பியனார் கூறிய ஆற்றுப்படை இலக்கணத்தின்படி அமைந்ததே என்கிறார்"[7].

மேற்கண்ட விளக்கங்களை ஒப்பிட்டு நோக்க திருமுருகாற்றுப்படைக்கு ஏற்ற வரையறையைத் தொல்காப்பியா? கூறவில்லை என்பதும், ஆனால் அதேநேரம் அது தொல்காப்பியர் கூறும் ஆற்றுப்படை இலக்கணத்தின்படி அமைந்துள்ளது என்பதும் புலனாகிறது. திருமுருகாற்றுப்படையும் சங்கப்பாடல்களும் எட்டுத்தொகையில் உள்ள பதிற்றுப்பத்தும் புறநானூற்றில் பாணாற்றுப்படை, விறலியாற்றுப்படை, புலவராற்றுப்படையில் அமைந்த பாடல்களும், பத்துப்பாட்டில் கூத்தராற்றுப்படை, பாணாற்றுப்டை என்ற பெயர்களில் தனித்தனிப் பாடல்களும் இடம்பெற்றுள்ளன. சங்க இலக்கியங்களில் அடியவரை இறைவன்பால் அவன் அருள் வேண்டி ஆற்றுப்படுத்தும் திருமுருகாற்றுப்படை போன்ற பாடல் எதுவும் இல்லை.

அத்துடன், இருக்கும் ஆற்றுப்படைப் பாடல்கள் பரிசில் பெறுபவன் பொன், பொருள் உள்ளிட்ட பொருட்களை வள்ளலிடம் பரிசிலாகப் பெறுவதைப் பற்றியனவாகவே உள்ளன. அவற்றின் அடிப்படை நோக்கங்கள் உலக இன்பங்களைப் பற்றியனவாகவே உள்ளன. "இவ்வாறான லௌகிக நோக்கங்களின் பொருட்டே ஆற்றுப்படைகள் தோன்றியிருத்தல் வேண்டும். வேறு நோக்கங்கள் தொடக்கத்தில் இல்லை."[8] ஆனால் காலப்போக்கில் புதிய

ஆக்கம் பற்றிய சிந்தனை உருவாகியிருக்கும். அதன் தொடக்கமாகப் பத்துப்பாட்டிலுள்ள பாடல்களில் ஏற்பட்ட மாற்றங்களைக் கூறலாம்.

## பத்துப்பாட்டின் பொது வடிவம்

எட்டுத்தொகையிலுள்ள ஐங்குறுநூறு, புறநானூறு, அகநானூறு முதலிய தொகுப்புகள் போல் இல்லாமல், அகப்பாடல்கள், ஆற்றுப்படைப் பாடல்கள் புறப்பாடல் என்ற பன்முகத்தன்மையுடைய (பாகுபாடுடைய) பாடல்களைக் கொண்டது பத்துப்பாட்டு. என்றாலும், அதில் இடம்பெற்றுள்ள பாடல்களில் சில பொதுத்தன்மைகள் உள்ளன. உதாரணமாகச் சொல்வதென்றால், அப்பாடல்களில் ஏற்பட்டுள்ள உருவ, உள்ளடக்க மாற்றங்களைக் கூறலாம். அம்மாற்றங்கள் பத்துப்பாடல்களிலும் ஒரே விதமாக நிகழ்ந்திருக்கின்றன. இந்த மாற்றங்கள் எப்படி நிகழ்ந்துள்ளன என்பதைப் பட்டினப்பாலைக்கும் பெரும்பாணாற்றுப்படைக்கும் இடையிலான உறவை வைத்து நாம் எளிமையாகப் புரிந்துகொள்ளலாம். அகமாக்கப்பட்ட புறம், ஆற்றுப்படை என்ற இரு வேறு பண்புகளைக் கொண்டுள்ள அவை பின்வரும் மூன்று ஒத்த செய்திகளையே உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன.

அவை, "1.அரசனின்சிறப்புகள், 2.நாட்டு வளம் மற்றும் மக்களின் செயல்பாடுகள், 3.உத்திமுறை"[9] ஆகியனவாகும். இவற்றில் முதல் செய்தி எட்டுத்தொகைப் பாடல்களில் உள்ளதைப் போன்றே இருப்பதுடன் அளவில் சற்று நீண்டதாகவும் உள்ளது. இரண்டாவது, மூன்றாவதாக அமைந்துள்ளவை திணை, துறை ஆகியவற்றினைத் தளர்த்தி (உடைத்து) ஒரு நீண்ட இலக்கியத்திற்கான வாயிலை ஏற்படுத்தியுள்ளன. பட்டினப்பாலையின் இப்பண்பு முற்றிலும் புறத்திணைக்குரிய ஒரு பாடாண் பாடல் கற்பனை சேர்ந்த ஓர் உத்தி முறைமையால் வேண்டுமென்றே அகத்திணை ஆக்கப்படுகின்றது"[10] என்பதும், "அகப்பாடலின் முதல் கருஉரிமரபு அதாவது அகப்பாடலின் தன்னியல்பான உணர்வெழுச்சி (spontaneity) செயற்கையாக்கப்படுகின்றது"[11] என்பதும் கவனிக்கத் தக்கன. அத்துடன், "சங்க இலக்கியங்களினுள்ளே கதைப்பாடல்கள் இல்லாத இன்றைய நிலையில் முல்லைப்பாட்டு, நெடுநல்வாடையில் குறிப்பாக நெடுநல்வாடையில் ஏற்படும் இந்நெகிழ்வு சங்கத் தமிழ்க் கவிதையியலிற் காணப்படும் வளர்ச்சியாகவே கொள்ளப்படவேண்டும். இந்த வளர்ச்சி நிலையிலிருந்து சிலப்பதிகாரத்திற்கான வளர்ச்சி அதிக தொலைவில் இல்லை. இந்த வளர்ச்சி வெறுமனே பாடல் அடிகளின் பெருக்கத் தினால் ஏற்படுவதன்று. இது கவிதையியலில் ஏற்படும் வளர்ச்சியாகும்"[12]

இந்த வளர்ச்சி முற்றிலும் மாறுபட்டதாகவும் இருக்க வாய்ப்பில்லை. ஒன்றின் தாக்கம் இன்னொன்றில் பிரதிபலிக்கும் அல்லவா? இலக்கியத்தின் தாக்கமும் அப்படித்தான். அடுத்தடுத்துத் தோன்றும் இலக்கியங்களில் தொடரும். ஏனெனில் படைப்பு படைப்பாளனின் உள்ளத்தில் இருந்து உருவாகிறது. சிறந்த படைப்பு என்பது படைப்பாளனின் படைப்புச் சுழலில் இருந்து உருவாகின்றது. இங்குச் சுழல் என்பது உள்ளதை உள்ளவாறு பிரதிபலிப்பது அல்லது உள்ளதைக் கொண்டு புதியதை உருவாக்குவது என்ற இரு நிலைகளில் அமையலாம். "தனக்கும் தான் படித்து ரசித்த கலைக்கும் உள்ள தொடர்பு, உறவு இது ஒரு தளம். அது போல "தன்னுக்கும் சமூகம் என்கிற பொருள் வகை என்ற ஒன்றுக்கும் உள்ள உறவு ஒரு தளம். மொத்தமாய் வரும் முடிவு, இத்தளங்களின் ஒருமித்த

இணைப்பே படைப்பு"[13] அதாவது பழமையின் தொடர்ச்சியையும் புதுமையின் வரவேற்பையும் உள்ளடக்கங்களாய்க் கொண்டமையும்.

திருமுருகாற்றுப்படை மற்ற ஆற்றுப்படைப் பாடல்கள் போல ஆற்றுப்படுத்துதல் என்ற அமைப்பைப் பெற்றிருந்த போதிலும் இரவலனை வள்ளலிடம் ஆற்றுப்படுத்துவது என்ற "இச்சிறு பயன்பெறுதற் பொருட்டுத் தம்மையும் தமிழையும் இழிவுபடுத்திக் கொள்ளுதல் பெருமக்கள் வெறுக்கத்தக் கதாகவே இருக்கும். இதனை நக்கீரர் உணர்ந்து ஆற்றுப்படையின் நோக்கத்தையே முழுதும் வேறு கொண்டு அவ்வகை நூல்களுக்குப் புதியதொரு கௌரவத்தைக் கொடுத்தனரென்றுதான் கொள்ளவேண்டும். இங்ஙனம் இயற்றிய புதுநூல் முருகாற்றுப்படையாகும்" [14]

**சிறுபாணாற்றுப்படையின் சாயலா திருமுருகாற்றுப்படை ?**

என்னதான் மற்ற ஆற்றுப்படைப் பாடல்களில் இருந்து திருமுருகாற்றுப்படை விலகி இருப்பினும் அப்பாடல் மற்ற ஆற்றுப்படைப் பாடல்களின் குறிப்பாகச் சிறுபாணாற்றுப்படையின் சாயல் அதிகம் காணப்படுவதை அறியமுடிகிறது. சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனான நல்லியக் கோடனைப் புகழும் புலவர், அவன் அளிக்கும் பரிசிலானது வஞ்சி, மதுரை உறந்தை ஆகிய மூன்று தலைநகரங்களில் அரசாளும் மூவேந்தர்கள் அளிக்கும் பரிசிலைவிடச் சிறந்தது என்கிறார். அத்துடன் அவன் பேகன், பாரி, காரி, ஆய், அதியன், நள்ளி, ஓரி ஆகிய கடையெழு வள்ளல்களைவிடக் கொடையில் சிறந்தவன் என்றும் கூறுகின்றார் (சிறுபாண்.41-115). இவ்வாறு பிற மன்னார்களை ஒப்பிட்டுப் பிற ஆற்றுப்படைப் பாடல்களில் கூறப்படவில்லை. ஆனால் திருமுருகாற்றுப்படையில் திருமால், சிவன், இந்திரன் முதலிய முப்பத்து மூன்று தேவர்களும் தம்முடைய குறையினை நீக்குமாறு முருகனிடம் வேண்டி அவன் அருளைப் பெற்று முன்பு போல் வாழ்ந்தனர் (முருகு.148-176)" என்று கூறப்பட்டுள்ளது.

அத்துடன், சிறுபாணாற்றுப்படையில் நல்லியக் கோடனைப் புகழ சேரநாட்டின் வளத்தையும் வஞ்சி மாநகரின் சிறப்புகளைப் பற்றி விரிவாகக் (சிறுபாண்.41-50) கூறி இறுதியில்,

**வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே - அதா அன்று**
**(சிறுபாண். 50)**

என்றும், பாண்டிய நாட்டின் பல்வேறு வளங்களையும் மதுரை மாநகரின் சிறப்புகளையும் பற்றி விரிவாகக் (சிறுபாண்.50-67) கூறி,

**மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே - அதா அன்று**
**(சிறுபாண்.67)**

என்றும், செம்பியனின் காவிரி நீரால் வளங்கொழிக்கும் சோழ நாட்டின் வளத்தையும் உறந்தை மாநகரின் சிறப்புகளைப் பற்றி விரிவாகக் (சிறுபாண்.67-83) கூறி,

**ஓடாப் புட்கை உறந்தையும் வறிதே - அதாஅன்று**
**(சிறுபாண்.83)**

என்று பிற வள்ளல்கள் அளிக்கும் ஈகையைவிட அதிகமான ஈகையளிப்பவன் என்பதை உணர்த்த "அதாஅன்று" என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு சொல்லாட்சி பிற ஆற்றுப்படைப் பாடல்களில் இல்லை. ஆனால் திருமுருகாற்றுப்படையில் முருகனின் இருப்பிடங்களை கூறுமுகமாக,

**அலைவாய்ச் சேரலும் நிலைஇய பண்பே - அதாஅன்று**
**(திருமுருகு.125)**

என்றும்,

**ஆவினன்குடி அசைதலும் உரியன் - அதாஅன்று**
**(திருமுருகு. 176)**

என்றும்,

**ஏரகத்து உறைதலும் உரியன் - அதாஅன்று**
**(திருமுருகு.189)**

என்றும்,

**குன்றுதொரு ஆடலும் நின்றதன் பண்பே - அதாஅன்று**
**(திருமுருகு.217)**

என்றும் முருகனின் இருப்பிடங்களைப் பற்றி கூறும் போது "அதாஅன்று" என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு சிறுபாணாற்றுப்படையின் மேற்கண்ட கூறுகளின் சாயல் திருமுருகாற்றுப்படையில் காணப்படுவதால் இப்பாடல் சிறுபாணாற்றுப்படை அடியொற்றிப் பாடப்பட்ட ஒன்றோ? என்று எண்ணத் தோன்றுகிறது. இதை உறுதிப்படுத்துவது போல அமைகின்றன ஆற்றுப்படைப் பாடல்களின் அமைப்பு முறை பற்றிய ஆராய்ச்சி முடிவுகள் "பத்துப் பாட்டிலுள்ள ஆற்றுப்படைப் பாடல்கள் 12 பெதுக்கூறுகளால் கட்டமைக்கப்பட் டுள்ளன. அவற்றில் 7 பொருட் கூறுகள் திருமுருகாற்றுப்படை முதலிய ஐந்து ஆற்றுப்படைப் பாடல்களிலும் பொது வாய் அமைந்துள்ளன. 12 கூறுகளை முழுமையாகப் பெற்ற பாடல்களாகச் சிறுபாணாற்றுப்படையும் கூத்தராற்றுப்படையும் விளங்குகின்றன.''[15] இந்த 12 கூறுகளில் "யாழ்வருணனை, இரவலன் பெற்றுவந்த பரிசில் அரசனின் உபசரிப்பு என்ற மூன்று கூறுகள் இடம்பெறவில்லை''[16] அத்துடன் "பிற ஆற்றுப்படைப் பாடல்களில் இடம்பெற்றுள்ள விறலி வருணனை என்ற கூறுக்கான இடத்தில் அதை ஒத்த சுரரமகளிர் வடிவ வருணனை இடம்பெற்றுள்ளதும்''[17]. பிற பாடல்களைப் போன்றே மலைவளத்தைக் கூறுவதுடன் பாடலை நிறைவு செய்வதும் எனப் பிற ஆற்றுப்படைப் பாடல்களின் அமைப்பை ஒத்த பாடலாகவும் இது அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## திருமுருகாற்றுப்படை - பத்துப்பாட்டின் கடவுள் வாழ்த்தா?

திருமுருகாற்றுப்படை சங்க இலக்கியப் பாடல்களுள் ஒன்றாகவே கருதப் பட்டுவருகிறது. எனினும் இப்பாடல் சங்க காலத்திற்குப் பிற்பட்ட ஒன்று என்பது தற்கால ஆய்வுகளின் முடிவாகும். அப்படியிருக்க இப்பாடல் சங்கப் பாடல்களுள் ஒன்றாக (பத்துப் பாட்டுள்) எவ்வாறு சோந்தது என்று அறியமுடியவில்லை. அதற்குக் காரணம் பத்துப் பாட்டுப் பாடல்களின் தொகுப்பு எப்போது நிகழ்ந்தது? அப்பாடல்களைத் தொகுத்தவா? யார்? என்ற கேள்விகளுக்குப் பதில் கிடைக்காமையே ஆகும்.

பத்துப்பாட்டிலுள்ள திருமுருகாற்றுப்படையைத் தவிரப் பிற ஒன்பது பாடல்களும் எட்டுத் தொகைப் பாடல்களுடன் ஒப்பிட அவை அளவில் மட்டுமல்ல பொருள் நிலையிலும் மாற்றமடைந்துள்ளதை அறியமுடிகிறது. அவை அகம்-புறம் என்ற இரண்டினையும் பிரிக்க இயலாத ஒரு நிலைக்குச் செல்கிறதே ஒழியத் திருமுருகாற்றுப்படையைப் போல் பக்தி நிலைக்கு அவை செல்லவில்லை. அப்படியிருக்க இத்திருமுருகாற்றுப்படையை எப்படி இப்பாட்டுகளுள் ஒன்றாக நம் முன்னோர் சேர்த்தனர் என்பது புரியவில்லை. பத்துப்பாட்டினை ஆராய்ந்துள்ள பேராசிரியர் எஸ்.வையாபுரிபிள்ளை,[18] க.கைலாசபதி,[19] மு.கோவிந்தசாமி,[20] ஆகியோர் திருமுருகாற்றுப்படையை எட்டுத்தொகையிலுள்ள கடவுள் வாழ்த்துப்

பாடல்களைப் போல் தொகுத்தவர்களால் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்று கருத்துக் கூறியுள்ளனர். ஆனால், இக்கருத்துப் பொருந்தாது என்று மறுக்கும் மு.ராமசாமி, அதற்குப் பின்வரும் காரணத்தைக் கூறியுள்ளார். அவர் கூறியுள்ள காரணம், "நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை ஆகிய தொகை நூல்களில் கடவுள் வாழ்த்துப் பாடல்களை நீக்கியே பாடல்களின் எண்ணிக்கை கணக்கில் கொள்ளப்படுகிறது. அவ்வாறு நோக்க ஒன்பது பாடல்களே உள்ள நூலிற்குப் பத்துப்பாட்டு என்னும் பெயர் எங்ஙனம் பொருந்தும்"[21] என்பதேயாகும். அவர் கூறியுள்ள மேற்கண்ட காரணம் சரியான ஒன்றா என்பது கேள்விக்குறி? காரணம், பாட்டு-பத்துப்பாட்டு என்ற சொற்களிடையே உள்ள கால இடைவெளியே ஆகும். அதாவது, பத்துப்பாட்டுப்பாடல்களைத் தொகுத்தோர் தொகுப்பித்தோர், தொகுக்கப்பட்ட காலம் பற்றிய செய்திகள் நமக்குக் கிடைக்காமல் போனாலும் தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய உரையாசிரியர்களில் ஒருவரான பேராசிரியரின் உரையில்தான் முதன் முதலில் பத்துப்பாட்டுப் பாடல்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. அத்துடன் அதில் "பத்துப்பாட்டு" என்று கூறப்படாமல் "பாட்டு"[22] என்று மட்டுமே கூறப்பட்டுள்ளது. அதைவிட இன்னொரு முக்கியமான செய்தி சங்கம் பற்றியும் அதில் இடம் பெற்றிருந்த நூல்கள் பற்றியும் கூறும் "களவியல்" உரையில் பத்துப்பாட்டிலுள்ள பாடல்கள் பற்றி ஏதும் கூறப்படவில்லை. இளம்பூரணர் உரையிலும்,[23] நன்னூல் மயிலைநாதர் விளக்க உரையிலும்[24] "பத்துப்பாட்டு" என்று இன்று அழைக்கப்படும் பெயர் முழுமையாகக் கிடைக்கிறது. இவற்றையெல்லாம் நோக்க, பத்துப்பாட்டிலுள்ள பாடல்களை முதலில் "பாட்டு" என்றே பல ஆண்டுகள் அழைத்துள்ளமையும் அதன் பிறகே "பத்துப்பாட்டு". என்று அழைக்கப்பட்டுள்ளமையும் புலனாகிறது. திருமுருகாற்றுப்படை பிற நீண்ட பாட்டு என்றழைத்த பாடல்களின் கடவுள் வாழ்த்துப் பாடலாக இருந்திருக்கலாம் என்றே தோன்றுகின்றது. ஏனெனில் எட்டுத்தொகையில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு தொகுப்பில் உள்ள பாடல்களுக்கும் தனித்தனியாக ஒவ்வொரு கடவுள் வாழ்த்துப் பாடல் உள்ளது. அது போலவே திருமுருகாற்றுப்படையும் தொடக்கத்தில் பிற பாடல்களுக்கு கடவுள் வாழ்த்துப் பாடலாக இருந்திருக்கலாம்.

### எட்டுத்தொகையிலுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்கள்

எட்டுத்தொகையிலுள்ள பரிபாடல், பதிற்றுப்பத்து நீங்கலான பிற ஆறு பாடல்களிலும் ஒவ்வொரு கடவுள் வாழ்த்துப் பாடல் உள்ளது. அதன் விவரம் வருமாறு.

| வ.எ | நூல் | கடவுள் | அளவு | பா வகை | பாடியவர் |
|---|---|---|---|---|---|
| 1 | நற்றிணை | திருமால் | 7 | ஆசிரியம் | பாரதம் பாடிய பெருந்தேவனார் |
| 2 | குறுந்தொகை | முருகன் | 6 | ஆசிரியம் | பாரதம் பாடிய பெருந்தேவனார் |
| 3 | ஐங்குறு நூறு | சிவன் | 3 | ஆசிரியம் | பாரதம் பாடிய பெருந்தேவனார் |
| 4 | அகநானூறு | சிவன் | 16 | ஆசிரியம் | பாரதம் பாடிய பெருந்தேவனார் |
| 5 | புறநானூறு | சிவன் | 13 | ஆசிரியம் | பாரதம் பாடிய பெருந்தேவனார் |
| 6 | கலித்தொகை | சிவன் | 17 | கலிப்பா | பாரதம் பாடிய பெருந்தேவனார் |

மேற்கண்ட பாடல்கள் அனைத்தும் அத்தொகுப்பிலுள்ள பாடல்களின் (அளவிலும் பாவகையிலும்) அமைப்பினைப் போன்றே உள்ளன. இவ்வாறே திருமுருகாற்றுப்படையும் பத்துப்பாட்டிலுள்ள பாடல்களின் அமைப்பினை (அளவிலும் பாவகையிலும்) ஒத்தே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## திருமுருகாற்றுப்படையும் நக்கீரரும்

சங்க இலக்கியங்களில் ஒன்றாக உள்ள திருமுருகாற்றுப்படை பன்னிரு திருமுறைகளில் பதினோராம் திருமுறையிலும் இடம்பெற்றுள்ளது. அத்துடன் அத்தொகுப்பில் நக்கீரர் பெயர் "நக்கீர தேவநாயனார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் கபில தேவனார், பரணதேவணார் என்ற பெயர்களைக் கொண்ட அடியவர்கள் இருவரின் பெயர்களும் அத்தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன"[25]. இவை சங்கப் புலவர்களான பரணர், கபிலரின் பெயர்களை ஒத்திருப்பது கவனிக்கத்தக்கது. நக்கீரர் என்ற பெயர் "சங்க நக்கீரர்: கி.பி.250 நெடுநல்வாடை, எட்டுத் தொகையில் சில பாடல்களைப் பாடியவர், 2. முருகாற்றுப்படை- நக்கீரர்: கி.பி.450 சைவ சமயத்தைச் சார்ந்தவர். 3.இறையனார் களவியலுரை கி.பி.650 (அடிநூல், களவியலுரை, நாலடிநானூறு), 4. நக்கீர தேவநாயனார் கி.பி. 850, 11ஆம் திருமுறைப் பிரபந்தங்கள், சைவசமயத்தைச் சேர்ந்தவர். இவ்வாறு நம் வசதிக்கு ஏற்பப் பிரித்து அறிவதோடு "நக்கீரர்சுசு எனும் பெயர் தொன்மைத் தமிழ் இலக்கிய இலக்கண வரலாற்றில் ஆதிக்கம் செலுத் தியிருப்பது"[26] இங்கு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய ஒன்று.

இது ஒருபுறமிருக்க நக்கீர தேவனார் என்ற பெயரில் பாடியதாகப் பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ள "பத்துப்பாட்டினுள் திருமுருகாற்றுப்படைக்கு ஒரு தனி நிலை உள்ளது. ஏனைய ஒன்பதும் மற்றொரு தனி நிலையில் உள்ளன"27. இப்படிப்பட்ட மாறுபாடு கொண்ட இந்நூலைச் சைவர்கள் நாள்தோறும் ஓதும் மந்திர நூலாகவும் போற்றுகின்றனர்.

**"நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற்றுப் படையைத்**
**தற்கோல நாள் தோறும் சாற்றினால் - முக்கோல**
**மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்**
**தான் நினைத்த எல்லாம் தரும்"[28]**

என்பது அதை உறுதிசெய்கிறது.

இவற்றுடன் பத்துப்பாட்டிற்கும் திருமுருகாற்றுப்படைக்கும் இடையிலான பதிப்பில் உள்ள இடைவெளியும் இங்குச் சுட்ட வேண்டிய ஒன்று. உ.வே.சாமிநாதையர் பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் என 1889 இல் தான் பதிப்பித்தார். ஆனால் அவருக்கு முன்னரே சரவணப் பெருமாளையரால் 1834 இல் திருமுருகாற்றுப்படை தனி நூலாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.அவருக்குப்பின்னர் வேதகிரி முதலியார் (1850), சுப்பராய முதலியார் (1852), ஆறுமுகநாவலர் (1853), சண்முக ஐயர் (1864), அ. இராமசாமி (1886) முதாலனோர் தனி நூலாகப் பதிப்பித்துள்ளனர். "ஆறுமுக நாவலர் பதிப்புகள் வரை திருமுருகாற்றுப்படை சங்க இலக்கியப் பத்துப்பாட்டில் ஒன்று என்ற விபரத்துடனோ, பதினோராம் திருமுறையில் ஒன்று என்ற தகவலோடோ பதிப்பிக்கப்படவில்லை"[29]. 1870 இல் சுப்பராய செட்டியார் பதிப்பித்த "பதினொரந்திருமுறை" எனும் நூலிலும் நக்கீரர் தோத்திரங்களுள் திருமுருகாற்றுப் படையும் இடம்பெற்றிருக்கிறது.

திருமுருகாற்றுப்படையை மூலமாகவும், நச்சினார்க்கினியர் உரையுடனும், தோத்திரப் பாடலாகவும்,

பதினொராம் திருமுறையில் ஒன்றாகவும் பதிப்பித்திருக்கின்றனர். ஆனால் உ.வே.சா. மட்டும் தான் பத்துப்பாட்டில் ஒன்றாகப் பதிப்பித்திருக்கின்றார். 19ஆம் நூற்றாண்டில் வெகுவாக வளர்ந்த பதிப்பு வரலாற்றில் திருமுருகாற்றுப்படைக்கெனத் தனி வரலாறு உண்டு."சைவ பக்திப் பனுவல்" என்கிற பின்புலத்தில் பதிப்பிக்கப்பட்ட இந்நூல் "சங்க இலக்கியம்" என்கிற புரிதலை இழந்திருக்கிறது. சங்க இலக்கியங்களில் திருமுருகாற்றுப்படைக்கு மட்டுமே பலர் உரையெழுதியிருப்பதாக அறியமுடிகிறது"[30]. அவை ஒரு உண்மையை புலப்படுத்துகின்றன. பத்துப்பாட்டில் ஒன்றா திருமுருகாற்றுப்படை உரையாசிரியர்களின் காலம் முதல் இன்று வரை பத்துப்பாட்டில் ஒன்றாகவும், அதிலிருந்து விடுபட்ட ஒன்றாகவும் வைத்துப் பார்க்கும் பார்வைதான் அது.

## முடிவுரை

தரவுகளை எல்லாம் ஒப்பிட்டுப் பார்க்க, திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டில் ஒன்றாகவும், சைவ சமய நூலாகவும் என்ற இரு நிலைகளில் வாசித்தவர்களால் தொடர்ந்து பார்க்கப்பட்டு வருகின்றது. என்றாலும், பன்னிரு திருமுறையில் உள்ள பாடல்களில் இருந்து அமைப்பு நிலையில் மாறுபடுவதுடன் ஆற்றுப்படைப் பாடல்களின் சாயலில் குறிப்பாகச் சிறுபாணாற்றுப்படையின் சாயலில் பாடப்பட்டுள்ள பாடல் என்பதைத் தெளிவாக அறியமுடிகின்றது. எனவே இப்பாடல் பொருநராற்றுப்படை முதலிய ஒன்பது பாடல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடலாகப் பாடப்பட்ட பாடல் என்பது தெளிவாகிறது. தொடக்கத்தில் கடவுள் வாழ்த்தாகக் கருதப்பட்ட அது பின்னர் அப்பாடல்களுள் ஒன்றாகப் பின் வந்தோரால் (தொகுத்தோரால் இருக்கலாம்) சேர்க்கப்பட்டிருக்கிறது. இத்தகைய மாற்றம் இளம்பூரணர், பேராசிரியர் (தொல்காப்பிய உரையாசிரியர்) மயிலை நாதார் நன்னூல் உரையாசிரியர்) காலத்திற்கும் இடையே நடைபெற்றிருக்கலாம் என்று அறியமுடிகின்றது. அத்துடன், பத்துப்பாட்டு என்ற பெயர் உருவாகிய அக்காலத்திற்குப் பின்னரும் திருமுருகாற்றுப்படை தனியாவும், பதினோரம் திருமுறையிலும் எனத் தனியாக வாசிக்கும் ஒரு போக்கு தொடர்ந்து 19 ஆம் நூற்றாண்டு வரை நிலவியிருப்பது அதன் தனித்தன்மையை உறுதி செய்கிறது. அதாவது, அப்பாடல் கடவுள் வாழ்த்துப் பாடல்தான் என்பது தான் அது.

## சான்றெண் விளக்கங்கள்

1. தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியர் உரை, 1955 (2ஆம் பதிப்பு), திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், திருநெல்வேலி, சென்னை, ப.259.
2. பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், 1974 (பதிப்பு 7), உ.வே.சா. நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை, ப.79.
3. துரையரங்கனார். டாக்டர் மொ. அ., 1960, அன்பு நெறியே தமிழர் நெறி, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, ப. 63.
4. இராசமாணிக்கனார்.மா., பத்துப்பாட்டு ஆராய்ச்சி, 1970, சென்னைப் பல்கலைக்கழகம், பக்.38-47.
5. கோவிந்தசாமி. மு., தமிழ் இலக்கிய வரலாறு - இலக்கியத் தோற்றம், 1969 (2 பதிப்பு), வாசுகி பதிப்பகம், அண்ணாமலை நகர், ப.61.
6. இலக்குவனார்.புலவர்., ஆற்றுப்படையும் ஆறுபடை வீடும், 1979 (ஆகஸ்ட்), செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 53, பரல் 12, ப.579.
7. வெள்ளைவாரணன். க., பன்னிரு திருமுறை வரலாறு, 1969, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், ப.671.

8. வையாபுரிபிள்ளை.எஸ்.,இலக்கியதீபம், 1952 (முதற்பதிப்பு), பாரிநிலையம், 59. சென்னை, ப.16.
9. சந்திரன். முனைவர் ஆ., இலக்கிய வளர்ச்சியில் உருத்திரங்கண்ணனாரின் பங்களிப்பு, தமிழ் இலக்கியங்களில் பன்முக ஆளுமை (ஆய்வுக் கட்டுரைகள்), 2013, செம்மூதாய்ப் பதிப்பகம், சென்னை, ப.142-45.
10.கார்த்திகேசு சிவத்தம்பி, தொல்காப்பியமும் கவிதையியலும், 2007, குமரன் புத்தக இல்லம், சென்னை, ப.18.
11.மேலது.
12.மேலது, ப.20.
13.தமிழவன், படைப்பும் படைப்பாளியும் (திறனாய்வுக் கட்டுரைகள்), 1989 (முதற்பதிப்பு), காவ்யா, பெங்களூர், ப.17.
14.வையாபுரிப்பிள்ளை, எஸ்., இலக்கிய தீபம், 1952 (முதற்பதிப்பு), பாரிநிலையம், சென்னை, ப.16.
15.சந்திரன். ஆ., பத்துப்பாட்டு அமைப்பு முறை ஓர் ஆய்வு (முனைவர்பட்ட ஆய்வேடு), 2012, திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம், (ப.136)
16.மேலது ப.137.
17.மேலது ப.135.
18.வையாபுரிப்பிள்ளை, எஸ்., வையாபுரி நூற்களஞ்சியம் (முதல் தொகுதி), 1989, இலக்கியச் சிந்தனைகள், நூற்றாண்டு நினைவு வெளியீடு, பக்.142-183.
19.கைலாசபதி. க, தமிழ் வீரநிலைக் கவிதைகள், 2006, குமரன் புத்தக இல்லம், சென்னை, ப.54.
20.கோவிந்தசாமி. மு., தமிழ் இலக்கிய வரலாறு - இலக்கியத் தோற்றம், 1969 (2 பதிப்பு), வாசுகி பதிப்பகம், அண்ணாமலை நகர், பக்.61,62.
21.இராமசாமி. மு.பொரி.மு., நக்கீரர் ஓர் ஆய்வு, 1983, பாரி நிலையம், ப.87.
22.வெள்ளைவாரணன், தொல்காப்பியம் செய்யுளியல் (உரைவளம்), மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1989, ப. 233.
23.மேலது ப.816
24.நன்னூல் மூலமும் மயிலைநாதா? உரையும், 1995 (மூன்றாம் பதிப்பு), உ.வே.சா.நூல் நிலையம், சென்னை, ப.212.
25.பன்னிரு திருமுறைகள் (தொகுதி 17), 2009, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, பக்.6,7.
26. http://www.keetru.com/visai/apr09/aiyyappan.php
27.அருணாசலம்.மு., தமிழ் இலக்கிய வரலாறு (பத்தாம் நூற்றாண்டு), பார்க்கர், சென்னை, ப.217.
28.சேதுராமன். முனைவர் சி., தமிழ் இலக்கிய வரலாறு, நியுசெஞ்சுரி புக் வுஸ் (பி) லிட், சென்னை, ப.40.
29. http://www.keetru.com/visai/apr09/aiyyappan.php
30.மேலது.